# 1.1 இதுதான் நான்

**இலக்கு**

*மாணவர் தம்மைத் தாமே ஒரு மரக்குறியீட்டின் துணையுடன் நல்லமுறையில் அறிந்துகொள்ளக் கற்கின்றனர். அவர்கள் தங்களுக்கே உரிய திறமைகளை, ஆர்வங்களை, தேவைகளை அதனூடாக அவை எவ்வளவு இன்றியமையாத தனித்துவம் மிக்கவை என்பதை உணர்ந்து கொள்கின்றனர். இந்த அடிப்படையில், அவர்கள் தங்களைப் பிறருடன் ஒப்பிட்டு பொதுமைகளையும் வேறுபாடுகளையும் கண்டறிவர்.*

வகுப்பு 1 - 6 | 30 - 45 மணித்துளிகள்

**கருவிகள்:**
கோட்டு வடிவ மரத்தின் படமுள்ள பணித்தாள்

**நடைமுறை:**

- மாணவர் ஒரு மரத்தின் வரிவடிவப் படம் கொண்ட பணித்தாளைப் பெறுவர். அந்த மரமானது தங்களது ஆளுமையின் உருவக வடிவம் என அவர்கள் விளங்கிக்கொள்வர். மரத்தின் பகுதிகள் பின்வரும் பிரிவுகளைக் குறிக்கின்றன. (பலகையில் ஓர் எடுத்துக்காட்டுடன் கலந்துரையாடப்பட்டு விளக்கப்பட வேண்டும்)
  - வேர்கள்: அடிப்படைத் தேவைகள். நான் வாழ்வதற்கு என்ன வேண்டும்? நான் எதனுள் ஆழமாக வேரூன்றியுள்ளேன்? (குடும்பம், உணவு, வீடு முதலியன)
  - கிளைகள்: திறமைகள் / வலிமைகள். என்னால் என்ன செய்ய முடியும்? எனது பலங்கள் என்ன?
  - இலைகள்: ஆர்வங்களும் / பொழுதுபோக்குகளும். எனது பொழுது போக்குகள் என்ன? எதில் நான் ஆர்வமாய் உள்ளேன்?
  - பூக்கள் அல்லது பழங்கள்: ஆசைகள் / கனவுகள். எதனை நான் விரும்புகிறேன்? எவ்வகைக் கனவுகளை நான் காண்கிறேன்?
  - மர அடிக்குற்றி: பெயர் / பட்டப் பெயர்



- மரங்களின் ஒவ்வொரு பிரிவும் என்ன குணத்தைக் கொண்டுள்ளது என மாணவர் எழுதுவர். (மிக இளைய மாணவர்களுக்கு ஆசிரியர் அல்லது வகுப்புத் தோழன் / தோழி துணை செய்யலாம்). தொடர்ந்து அவர்கள் தாள்களை நிறம் தீட்டுவர்.
- முழு வகுப்புடனும் உருக்காட்டலும் கலந்துரையாடலும்: ஒவ்வொரு மாணவர் தன் மரப்படத்துடன் தன் ஆளுமையையும் வழங்குகிறார். முன்னரேயே ஒரு சில வாக்கியத் தொடக்கங்களை மாணவருக்கு வழங்குவது பயன்மிக்கது. (பலகையில் எழுதி விடலாம்) (எ.கா.: "எனது திறமைகளாவன:...", "...நான் ஆர்வமாக உள்ளேன்". நிறைவாக, பால், அகவை தொடர்பான ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் உள்ளடங்கிய பொதுத்தன்மைகளும், வேறுபாடுகளும் கலந்துரையாடப்படலாம்.